بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 05/08/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

# 2022 ஆம் வருடத்தின் பிரிட்டன் ஆண்டு மாநாட்டையொட்டி கண்ணியத்திற்குரிய விருந்து உபசரிப்பவர்களுக்கும் விருந்தினர்களுக்குமான பொன்னான அறிவுரைகள்

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இவ்வருடம் பிரிட்டனின் ஆண்டு மாநாடு, 2019 ஆம் ஆண்டுக்குப் பிறகு மீண்டும் பெரிய அளவில் நடைபெறுகின்றது. கடந்த ஆண்டும் மாநாடு நடந்தது. ஆனால், வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையுடன் நடந்தது. இவ்வருடமும் ஒருவகையில் இந்த ஆண்டு மாநாடு பிரிட்டன் ஜமாஅத்துடையதாக மட்டும் இருக்கிறது. வெளியிலிருந்து வரும் விருந்தினர்கள் மிகக் குறைவான எண்ணிக்கையிலேயே கலந்து கொள்கிறார்கள். ஆனால், மூன்று நாட்களும் இன்ஷா அல்லாஹ் பிரிட்டனின் அனைத்து ஜமாஅத்களுக்கும் கலந்து கொள்ள அனுமதி இருக்கிறது; இன்ஷா அல்லாஹ் இருக்கும். இன்ஷா அல்லாஹுத் தஆலா! வருகை நன்றாக இருக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. கோவிட் தொற்று நோயின் காரணத்தினால், ஆண்டு மாநாட்டின் தொடர்ச்சியை முறித்து விட நேர்ந்தது. மேலும், ஆண்டு மாநாட்டின் அருள்களிலிருந்து நாம் முறையாகப் பலன் பெற முடியாமல் போனது என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஒரு வருடமோ முற்றிலுமே பலன் பெற முடியவில்லை.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கலந்து கொள்கின்ற அனைவருக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், முகக் கவசம் அணியுமாறும், வரும் போதும் போகும் போதும் ஏற்பாட்டாளர்களால் வழங்கப்பட்டுள்ள ஹோமியோபதி மருந்துகளைப் பயன்படுத்துவதைப் பேணுமாறும் வலியுறுத்தினார்கள். மேலும், பணியாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கியவாறு கூறினார்கள்:*

பொதுவாக நான் ஆண்டு மாநாட்டிற்கு ஒரு வாரம் முந்தைய குத்பாவில் மாநாடு பற்றி, பணியாளர்களுக்கும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது விருந்தினர்களுக்காகத் தங்களது நேரத்தைத் தியாகம் செய்கின்ற தன்னார்வ தொண்டர்களுக்கும் சில விஷயங்களின்பால் கவனமூட்டுவேன். கடந்த குத்பாவில் நான் இதன் பால் கவனமூட்ட முடியவில்லை. எனவே, இன்று இது குறித்து சில விஷயங்களை எடுத்துக் கூறுவேன். நாம் இந்த விஷயங்களைக் கருத்தில் கொண்டால், மாநாட்டின் உண்மையான சூழலில் இருந்து இன்ஷா அல்லாஹ் நாம் பலன் பெற்றுக் கொண்டே இருப்போம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது கூற்றுக்கு ஏற்ப, இந்த மாநாடு ஒன்றும் உலகத் திருவிழா இல்லை. மாறாக, அல்லாஹ் மற்றும் அவனது

ரஸூல் (ஸல்) அவர்களின் விஷயங்களைக் கேட்கவும் அதற்கேற்ப நம்மை அமைத்துக் கொள்வதற்காகவும் நாம் இங்கு ஒன்று கூடுகிறோம்; ஒன்று கூடி உள்ளோம்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* ஆண்டு மாநாட்டின் பணி வெறும் மாநாட்டின் மூன்று நாட்கள் மட்டுமே நடைபெறுவதில்லை. மாறாக, பல வாரங்கள் முன்பே ஆரம்பமாகி விடுகின்றது. தற்போது MTA தனது செய்திகளிலும் சிறிய சிறிய கிளிப்புகள் வடிவிலும் எவ்வாறு பணி நடக்கிறது என்பதனைக் காண்பிக்கின்றது. சந்தேகமின்றி, சில பணிகள் வெளி கம்பெனிகள் மற்றும் குத்தகைக்காரர்கள் மூலமாக செய்ய வைக்கப்படுகின்றன.

ஆனால், அது தவிரவும் பல பணிகள் உள்ளன. அவற்றிற்கு மனித ஆற்றலின் அவசியம் ஏற்படுகிறது. மேலும், இந்த ஆற்றலைத் தன்னார்வ தொண்டர்கள் தங்களது நேரங்களைத் தியாகம் செய்தும் தங்களது தொண்டுகளை சமர்ப்பித்தும் கிடைக்கச் செய்கிறார்கள். உலகம் எங்களுக்குத் தன்னார்வ தொண்டாற்றும் மக்கள் கிடைக்க வேண்டும் என்று முயற்சி செய்கிறது. ஆனால், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாறு இதற்கு முற்றிலும் மாறுபட்ட உதாரணத்தை எடுத்து வைக்கின்றது. எந்த அளவு தொண்டு செய்பவர்கள் வந்து விடுகிறார்கள் என்றால், அவர்களை எவ்வாறு கையாளுவது என்பதில் ஏற்பாட்டாளர்களுக்குக் கடினம் ஏற்பட்டு விடுகிறது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* விருந்து உபசரிப்புத் துறை இனிவரும் காலத்துக்கு இந்த விஷயத்தைக் குறித்துக் கொள்ள வேண்டும். மாநாட்டிற்கு முன்போ அல்லது பிறகோ நடைபெறும் வக்காரே அமல் பணிகளுக்காக, பொது அழைப்பின் காரணத்தால், இதில் எதிர்பார்ப்பதை விட அதிகமாக மக்கள் வந்து விடுகிறார்கள். கடந்த ஞாயிறு அன்று எந்த அளவுக்குப் பணியாளர்கள் ஹதீக்கத்துல் மஹ்தியில் ஒன்று திரண்டு விட்டார்கள் என்றால், அந்த அளவு வருவார்கள் என்று ஏற்பாட்டாளர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. அவர்களுக்கு சரியான முறையில் உணவிற்கான ஏற்பாடும் செய்ய முடியவில்லை என்று எனக்குத் தெரியவந்தது. இத்தனைக்கும் ஏற்பாட்டாளர்கள் இவ்வளவு மக்கள் இருக்கின்றார்கள் என்றால், முன்னரே பார்த்து ஏற்பாடு செய்திருக்க வேண்டும். (இது விருந்து உபசரிப்புத் துறையின் பணியாகும்).

இந்தத் தன்னார்வ தொண்டர்கள் ஒன்றும் உணவின் நேரத்தில் ஒன்று கூடியவர்கள் அல்லர். காலையிலிருந்தே பணி செய்திருக்கிறார்கள் அல்லது அங்கு இருந்திருக்கிறார்கள். கடந்த ஜுமுஆவின் இறுதியில் நான் மாநாட்டைப் பற்றியும் பணிபுரிபவர்களுக்காகவும் துஆவுக்காகக் கூறினேன். எனவே, உடனடியாக ஓர் உத்வேகத்துடன் இன்னும் பல மக்களும் தொண்டாற்ற வந்துவிட்டார்கள் என்று நான் கருதுகிறேன். ஆனால், எவ்வாறு இருப்பினும், குறிப்பாக வார இறுதியில் இதில் சிறப்பான ஏற்பாட்டை ஏற்பாட்டாளர்கள் செய்ய வேண்டும். அதேபோன்று மாநாட்டின் நாட்களில் பொதுவாக அதிக எண்ணிக்கையில் உணவு தயார் செய்ய வேண்டியதும் விருந்து உபசரிப்புத் துறையின் பணியாகும். மேலும், வருக்கின்ற விருந்தினர்களை முழுமையான முறையில் உபசரிப்பது விருந்து உபசரிப்புத் துறையின் பொறுப்பாகும்.

பணியாளர்களுக்கும் நான் கூற விரும்புகிறேன். அவர்கள் மாநாட்டின் இந்த மூன்று நாட்களிலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது விருந்தினர்களுக்கு எந்த உணர்ச்சியுடன் சேவை செய்ய வேண்டும் என்றால், அவர்களது உள்ளத்தில் எப்போதும் அவர்கள் தங்களது அதிகாரிகளிடமிருந்தோ அல்லது யாரேனும் விருந்தினரிடமிருந்தோ இத்தொண்டிற்காக எந்தவோர் ஆதாயமும்

பெறக் கூடாது. மேலும், கிடைக்காது என்ற உணர்வுடன் தொண்டாற்ற வேண்டும். இன்னும் கூறுவதாயின், அல்லாஹ்வின் திருப்திக்காக இந்த விருந்தாளிகளுக்கு சேவை செய்ய வேண்டும்.

தங்களது பிள்ளைகளையும் பசியுடன் உறங்க வைத்துவிட்டு, தாமும் பசியுடன் இருந்து, விருந்தினருக்கு விருந்து உபசரிப்பின் உரிமையை நிறைவேற்றிய அந்த ஸஹாபி மற்றும் அவரது மனைவியின் முன்மாதிரியை கண் முன் நிறுத்த வேண்டும். வெளிச்சத்தை அணைத்துவிட்டு விருந்தினருடன் தாமும் உணவு உண்கிறார்கள் என்பது போன்று விருந்தினருக்கு வெளிப்படுத்தினார்கள். பிறகு, இறைவன் அவர்களின் இந்த செயலை எந்த அளவுக்கு மெச்சினான் என்றால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கும் இந்த விஷயத்தைத் தெரிவித்தான். அடுத்த நாள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்த சஹாபியிடம், 'நீங்கள் இரவு வகுத்த திட்டத்தால் அல்லாஹுத் தஆலாவும் சிரித்தான். இதனால் அல்லாஹுத் தஆலா மிகவும் மகிழ்ச்சியுற்றான். மேலும், சிரித்தான்' என்று கூறினார்கள். திருக்குர்ஆனிலும் இவ்வாறான தியாகங்களை செய்பவர்கள் பற்றிக் கூறியுள்ளான். இந்தத் தியாகங்களைச் செய்கின்றவர்கள் சுயநலம் இன்றி தியாகங்களைச் செய்கின்றார்கள். இவர்களே வெற்றி பெறுபவர்கள் ஆவார்கள்.

ஆக, இதுதான் சஹாபிகளின் விருந்து உபசரிப்பின் வழிமுறையாக, விருந்தினர்களுக்குத் தொண்டாற்றுவதன் வழிமுறையாக இருந்தது. அல்லாஹுத் தஆலாவின் திருப்திக்காக விருந்தினர்களுக்குத் தொண்டாற்றும் உரிமையை நிறைவேற்ற முயற்சி செய்பவர்கள் எவ்வளவு நற்பாகியசாலிகள்! விருந்தினர்களும் எத்தகைய விருந்தினர்கள் என்றால், அவர்கள் காலத்தின் இமாம் அழைத்ததனால் வந்திருக்கிறார்கள். அவர்கள் அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களது விஷயங்களைக் கேட்பதற்காக வந்திருக்கிறார்கள். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறும் நாட்டத்துடன் வந்திருக்கிறார்கள். ஆக, மார்க்கத்துக்காக வருகை தருகின்ற விருந்தினர்களுக்கு, அல்லாஹுத் தஆலாவை மகிழ்ச்சி அடையச் செய்வதற்காகத் தொண்டாற்றுகின்ற அந்த அனைத்துத் தன்னார்வ தொண்டர்களும் மிகவும் நற்பாக்கியசாலிகள் ஆவார்கள்.

*ஆண் பணியாளர்கள் மற்றும் லஜ்னா பணியாளர்களுடைய பணிகள் தொடர்பாக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* அதிக எண்ணிக்கையில் பல்வேறு இயல்புடைய மக்கள் இருக்கும்போது, கடுமையான இயல்புடைய மக்களும் சிலர் இருப்பார்கள். சில சமயங்களில் பணியாளர்களிடம் கடுமையாகக் பேசவோ அல்லது ஏதேனும் பொருளைக் கேட்கவோ செய்வார்கள். ஆனால், எவருடனும் கடுமையுடன் நடந்து கொள்ளாமல் இருப்பதே பணியாளர்களுடைய பணியாகும். கடுமையாகப் பேசும் எவருக்கும் கடுமையாக அல்லாமல், சிரித்தவாறு பதில் கூற வேண்டும். தேவையை நிறைவேற்ற முடியும் என்றால் நிறைவேற்றுங்கள். இல்லாவிடில், மென்மையாகவும் அன்புடனும் காரணத்தை கூறிவிடுங்கள். அல்லது விருந்தினரின் பிரச்சினையைத் தீர்க்க முடிந்த உங்களது உயர் அதிகாரியிடம் அழைத்துச் செல்லுங்கள். சில சமயங்களில் இந்தப் பணி மிகவும் கடினமாகி விடுகின்றது. ஆனால், இறைவனது திருப்தியைப் பெறுவதற்காக இந்தப் பணியை செய்ய வேண்டும். உங்களது உணர்வுகளையும் நாவினையும் கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும்.

அதேபோன்று பணியாளர்களும் பரஸ்பரம் மென்மையாக பேச வேண்டும். அதிகாரிகளும் மேற்பார்வையாளர்களும் கூட தங்களது உதவியாளர்களுடன் மென்மையாகப் பேசுங்கள். ஒருவேளை எவராலும் ஏதேனும் தவறு நேர்ந்து

விட்டால், அன்புடன் புரிய வையுங்கள். இந்தத் தன்னார்வ தொண்டர்கள் அல்லாஹ்வின் திருப்திக்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது விருந்தினர்களுக்குத் தொண்டாற்றுவதற்காக வந்திருக்கிறார்கள் என்பதை அதிகாரிகளும் உணர்ந்திருக்க வேண்டும். ஏதேனும் குறிப்பிட்ட துறைக்காக பயிற்சி பெற்றவராக இல்லாமல் இருந்த போதிலும் தொண்டாற்றும் உணர்வுடன் சுயநலம் இன்றி தொண்டாற்றுகிறார்கள் என்றால், அவர்களும் போற்றப்பட வேண்டும்.

அல்லாஹுத்தஆலா ஒருவருக்கொருவரும் இணைந்து பணியாற்றும் நல் வாய்ப்பை வழங்குவானாக! அதிகாரிகளும் உதவியாளர்களும், நாம் இந்தத் தொண்டினை தியாக உணர்வோடு செய்ய வேண்டும் என்ற விஷயத்தைப் புரிந்து கொள்ளும் போதுதான் இந்த உணர்வு உருவாகும். பல்வேறு துறைகளில் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளும் எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹுத் தஆலாவின் அருளால் அவர்களுக்குத் தொண்டாற்றும் வாய்ப்பு கிடைக்கின்றது. அவர்கள் அதிகாரியாக அல்லாமல், தொண்டராக இருந்து தங்களது கடமைகளை நிறைவேற்ற வேண்டும். தங்களது மேலான நல்லொழுக்கத்தின் முன்மாதிரியை நிலை நாட்ட வேண்டும். அப்போதுதான் அவர்களுக்குக் கீழ் பணியாற்றக்கூடியவர்களும் உதவியாளர்களும் மேலான நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவார்கள். அல்லாஹுத்தஆலா அனைவருக்கும் அதற்கான நல் வாய்ப்பையும் வழங்குவானாக!

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பல சந்தர்ப்பங்களில் விருந்தினர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது பற்றி அறிவுரைகள் வழங்கி இருக்கிறார்கள். ஒரு சந்தர்ப்பத்தில், 'பாருங்கள்! பல விருந்தினர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களில் சிலரை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் மற்றும் சிலரை அறிந்திருப்பதில்லை. எனவே, அனைவரையும் கண்ணியத்திற்குரியவர்களாகக் கருதி உபசரிப்பதே பொருத்தமாகும்' என்று கூறினார்கள். எனவே, இந்தக் கோட்பாட்டை எப்போதும் ஒவ்வொரு பணியாளரும், குறிப்பாக, மக்களுடன் நேரடியாகத் தொடர்பு ஏற்படுகின்ற பணியாளர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். குறிப்பாக, விருந்து உபசரிப்புத் துறை மற்றும் உணவு விநியோகத் துறை போன்றவை இதனை மிகவும் பேணியவாறு செயல்பட வேண்டும்.

*விருந்தினர்களுக்கு உணவு குறித்து பல்வேறு பொதுவான அறிவுரைகளை வழங்கிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவது பணியாளர்களது பணி மட்டுமல்ல. மாறாக, கலந்து கொள்கின்ற ஒவ்வொருவரது பணியாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மாநாட்டில் கலந்து கொள்பவர்களிடமும், 'நல்ல பண்புகளை வெளிப்படுத்துங்கள். ஒருவர் மற்றவரைக் கருத்தில் கொள்ளுங்கள்' என்று கூறியுள்ளார்கள். கலந்து கொள்கின்ற ஒவ்வொருவரும், அவர் இந்த மாநாட்டில் தனது மார்க்க, ஞான மற்றும் ஆன்மீக தாகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காகக் கலந்து கொண்டிருக்கின்றார் என்ற விஷயத்தை எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டும்.

மேலும், இதனைப் பெறுவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது இந்த விஷயத்தை எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது, இந்த மாநாடு முற்றிலும் இறைவனுக்கான மாநாடு ஆகும். எனவே, ஒருபோதும் சிறு சிறு விஷயங்களில் எவ்வித அமைதியின்மையையும் மனக்கசப்பையும் வெளிப்படுத்தக் கூடாது. பணியாளர்களும் மனிதர்கள் தான். அவர்களிடம் ஏதேனும் கடுமை வெளிப்பட்டு விட்டது என்றால், அதனை கண்டும் காணாமல் விட்டு

வேண்டும். ஆகவே எப்போதும் இந்த நாட்களில் இந்த விஷயத்தையும் நினைவில் கொள்ளுங்கள்.

*ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:* **'அல்லாஹ்வே நாங்கள் உன்னிடம் இந்தப் பயணத்தில் நன்மை மற்றும் இறையச்சத்தை நாடுகின்றோம். நீ எங்களுக்கு நீ விரும்புகின்ற நல்ல அமல்களைச் செய்யும் நல்வாய்ப்பை வழங்குவாயாக!' என்று துஆ செய்யுங்கள்.**

நாம் இவ்வாறு துவா செய்து வரும் போது, அல்லாஹுதஆலா நாம் இங்கு தங்குவதையும் நமது பயணத்தையும் அருள்களால் நிரப்பி விடுவான். எனவே, இந்த நாட்களை துஆக்கள் மற்றும் திக்ரே இலாஹியால் நிரப்புவதற்கு முயற்சி செய்யுங்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களோ நமக்கு எல்லா சந்தர்ப்பத்திற்குமான துஆவைக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். சில மக்கள் தங்களது வீடுகளை விட்டுவிட்டு மாநாட்டின் அருள்களிலிருந்து பலன் பெறுவதற்காக வந்துள்ளார்கள். அவர்களுக்கு தமது வீட்டில் உள்ளவர்கள் பற்றிய கவலையும் இருக்கும்.

எனவே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'எங்களது இறைவா! நான் பயணத்தின் கடினங்களில் இருந்தும், விரும்பத்தகாத மற்றும் நிம்மதி இழக்க செய்கின்ற காட்சிகளில் இருந்தும், செல்வம் மற்றும் குடும்பத்தினர்களுடைய தீய மற்றும் விரும்பத்தகாத மாற்றங்களில் இருந்தும் அடைக்கலத்தை நாடுகிறேன்' என்ற துஆவைச் செய்யுங்கள்.

மிகவும் முழுமையான துஆவாகும். இது, பயணத்தில் தம்மையும் எல்லா விதத்திலும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கும், வீட்டில் உள்ளவர்களும் அல்லாஹ்வின் பாதுகாப்பில் இருப்பதற்குமான துஆ ஆகும். இவ்வாறான சிந்தனைகளுடனும் இப்படிப்பட்ட துஆக்களை கூறியவாறு, ஆண்களும் பெண்களும் இங்கு சுற்றித் திரிந்தால், பிறகு, சூழல் அமைதி மிக்கதாகவும் இருக்கும் வேளையில், உள்ளங்களின் அமைதிக்கும் காரணமாக ஆகிவிடும் போது, அல்லாஹுத் தஆலா எல்லாவித தீய காட்சிகளில் இருந்தும் பாதுகாப்பான். இன்றைய நாட்களில் கோவிடின் காரணத்தினால் கவலையும் இருக்கின்றது.

எனவே துஆக்களின் பால் கவனம் செலுத்த வேண்டும். பொதுவான துஆக்களுடன் இந்த நாட்களில் குறிப்பாக துரூதும் ஓதுங்கள். அல்லாஹுத்தஆலா மாநாட்டில் கலந்து கொள்கின்ற ஒவ்வோர் ஆணையும் பெண்ணையும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய துஆக்களுக்கு வாரிசாக ஆக்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ

اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ

يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ

يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)**